# இதிகாசச் சிற்பங்கள்

**இரா. பமிலா & முனைவர்.தே. நாகலெட்சுமி**
**தமிழ்த்துறை, தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோயில்,**
**கன்னியாகுமரி மாவட்டம்-629002.**

34

**ஆய்வு சுருக்கம்**

இதிகாசங்களே காலத்தால் முற்பட்டது என்பதால் அவை தொடர்பான சிற்பங்கள் முக்கியத்துவம் பெற்றன. இறைவனாயிருப்பினும் மனிதவுருவெடுத்து ஒரு மாமனிதன் எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு இராமன் ஓர் சிறந்த எடுத்துக்காட்டுப் பாத்திரமாக இருந்ததால் வைப்பு முறையில் முதலில் இராமாயணச் சிற்பங்களும், அதனை அடுத்து மகாபாரதச் சிற்பங்களும் இடம் பெறுகின்றன. விஜயநகர – நாயக்கர் கால மண்டபங்களில் இடம் பெறும் இராமாயணச் சிற்பங்களில் அதிகமாக இடம் பெற்றிருக்கும் சிற்பம் இராமனது சிற்பம் ஆகும். இராமன் தனித்தும், இலக்குவன், சீதை, அனுமன் ஆகியோருடன் சேர்ந்தும் சிற்பங்களில் காட்டப்பட்டுள்ளான். ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில், நாங்குனேரி, ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார் திருநகாp, தாடிக்கொம்பு, மன்னார்கோயில், திருமோகூர் ஆகிய கோயில் மண்டபங்களில் இராமனது சிற்பம் இடம் பெற்றுள்ளது. இலக்குவனது சிற்பம் தனித்தும், இராமனுடன் சேர்ந்தும் அமைந்துள்ளது. ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில், ஸ்ரீ வைகுண்டம், திருமோகூர், ஆழ்வார் திருநகரி, நாங்குனேரி, மன்னார்கோயில் ஆகிய கோயில்களில் இலக்குவனது சிற்பம் இடம் பெற்றுள்ளது. இராமாயணச் சிற்பங்கள் இடம் பெறும் கோயில்களில் எந்தக் கோயிலிலும் சீதை தனியாகக் காட்டப்படவில்லை. பெரும்பாலும் இராமனுடன் காட்டப்படுகிறாள். இது ஒரு மரபாகவே இருந்து வந்துள்ளது. விஜயநகர - நாயக்கரது கலைகளில் அனுமனுக்கு முக்கியமான இடம் உண்டு. விஜயநகர - நாயக்க மன்னர்கள் இறைவனிடம் நாங்கள் கொண்டுள்ள பக்தி அனுமான் இராமபிரானிடம் கொண்டிருந்த பக்திக்கு ஈடாகயிருக்க வேண்டும் என்று விரும்பி அனுமனைப் போற்றியிருக்கலாம் என்று கூறவும் வாய்ப்புள்ளது. விஜயநகர – நாயக்க மன்னர்காலத்தில் இதிகாசங்களுக்கும் புராணக் கதைகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து அவற்றை விளக்கும் சிற்பங்களும், சிற்பத் தொகுதிகளும், கோயில் மண்டபங்களிலும், விமானத்தின் தளங்களிலும், கோபுரங்களின் தளங்களிலும் செதுக்கப்பட்டுள்ளமை புலனாகிறது.

**கடவுச் சொற்கள்**

இதிகாசம் - இராமாயணம் – மகாபாரதம் - இலக்குவன் - சீதை – அனுமன் - விஜயநகர - நாயக்கர் - ஸ்ரீவில்லிபுத்தூர் - ஆண்டாள் கோயில் – நாங்குனேரி -ஸ்ரீவைகுண்டம் - ஆழ்வார் திருநகரி - தாடிக்கொம்பு - மன்னார்கோயில் திருமோகூர்

**இதிகாசச் சிற்பங்கள்**

**முன்னுரை**

இதிகாசங்களே காலத்தால் முற்பட்டது என்பதால் அவை தொடர்பான சிற்பங்கள்

முக்கியத்துவம் பெற்றன. இறைவனாயிருப்பினும் மனிதவுருவெடுத்து ஒரு மாமனிதன் எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு இராமன் ஓர் சிறந்த எடுத்துக்காட்டுப் பாத்திரமாக இருந்ததால் வைப்பு முறையில் முதலில் இராமாயணச் சிற்பங்களும், அதனை அடுத்து மகாபாரதச் சிற்பங்களும் இடம் பெறுகின்றன. இதிகாசங்கள் காலங்காலமாக மக்களின் மத்தியில் செல்வாக்குப் பெற்று வந்தவை. எனவே, இவ்விதங்களில் வரும் திருமாலின் அவதாரங்களாகக் கொள்ளப்படும் இராமனும் கிருஷ்ணனும் வைணவ வழிபாட்டில் அதிகச் செல்வாக்கும் பெற்றனர். இவர்களுக்கென தனிக் கோயில்கள் தோன்றின. விஜயநகர - நாயக்கா; கால மண்டபங்களின் தூண் சிற்பங்களிலும் இவர்களது சிற்பங்கள் இன்றியமையாத இடத்தைப் பெற்றன. விஜயநகர – நாயக்கர் கால மண்டபங்களில் இராமாயணம் தொடர்பாக கீழக்காணும் முக்கியமான பாத்திரங்கள் சிற்பங்களாக இடம் பெறுகின்றன.

**இராமன்**

விஜயநகர - நாயக்கர்கால மண்டபங்களில் இடம் பெறும் இராமாயணச் சிற்பங்களில் அதிகமாக இடம் பெற்றிருக்கும் சிற்பம் இராமனது சிற்பம் ஆகும். இராமன் தனித்தும், இலக்குவன், சீதை, அனுமன் ஆகியோருடன் சேர்ந்தும் சிற்பங்களில் காட்டப்பட்டுள்ளான். ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில், நாங்குனேரி, ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார் திருநகரி, தாடிக்கொம்பு, மன்னார்கோயில், திருமோகூர் ஆகிய கோயில் மண்டபங்களில் இராமனது சிற்பம் இடம் பெற்றுள்ளது. இதைத் தவிர திருமெய்யம் மற்றும் தென்திருப்பேரைக் கோயில்களின் தூண்களில் இராமனது சிற்பம் இடம் பெற்றிருப்பினும் அது மண்டபச் சிற்பங்கள் எனும் அமைப்பில் இடம் பெறவில்லையாதலால் இங்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. மேற்கண்ட கோயில்களில் ஸ்ரீவில்லிபுத்தூரில் மட்டும் இராமன் தனித்துக் காட்டப்பட்டுள்ளான். இராமனது கைகளில் வில், அம்பு, இடம் பெறுவதோடு முறுக்கிய மீசையுடன் காட்டப்பட்டுள்ளான். பொதுவாக இராமனது சிற்பம் மீசை இன்றிக் காட்டப்படும். இங்கு இராமனது கைகளில் வில், அம்புடன் காட்டப்பட்டுள்ளதும், முறுக்கிய மீசை இடம் பெற்றிருப்பதும் சத்திரிய வம்சத்தைச் சேர்ந்த இராமன் அசுரவதைக்காகப் போர்க்கோலம் பூண்டதைக் காட்டுகிறது. தாடிக்கொம்பில் அனுமனது தோள் மீது இராமன் அமர்ந்து போருக்குக் கிளம்புவதுபோல் அமைக்கப்பட்டுள்ளது. இதில் இராமனது திருவடி இரண்டையும் அனுமன் கையில் ஏந்தியபடி, கால்களை முன்னும், பின்னுமாக வைத்திருக்கும் அனுமனது நிலை பறப்பதுபோல் உள்ளது. இராமனது இடக்கரத்தில் வில் இடம் பெறுகிறது. வலக்கரத்தின் அமைப்பானது தனக்குப் பின்பக்கம் இருக்கும் அம்பராவிலிருந்து அம்பை எடுக்க முற்பட்ட போது இராமன் சிரித்த முகத்துடன் காட்டப்பட்டிருப்பது அழகான காட்சியாகும். இதனை வீரரசத்தில் இடம் பெறும் நகை எனும் மெய்ப்பாடாக கொள்ளலாம். இதே அமைப்பில் மண்டபத்தில் வைகுண்டநாதன் சிற்பம் இடம் பெற்றுள்ள தூணில் பக்கவாட்டில் ஒரு சிற்பம் இடம் பெற்றுள்ளது. ஆனால் முன்னதைப்போல இது அழகுறச் செதுக்கப்படவில்லை.

திருமோகூரில் இராமன் சீதையுடன் இடம் பெறுகின்றான். நின்ற கோலத்தில் இடம் பெறும் இவர்களில் இராமனது இடக்கரத்தில் வில் இடம் பெறுகிறது. வலக்கரத்தால் அருகில் உள்ள

சீதையைத் தழுவிய நிலையில் காட்டப்பட்டுள்ளான். இராமனுக்குப் பின்புறம் அம்பரா இடம் பெறவில்லை. இங்கு தழுவிய கோலம் காட்டப்பட்டிருப்பதால் அம்பரா இடம் பெறவில்லை எனக்கருதலாம். இராமன் வில்லுடன் காட்டப்படுவது மரபாகும். எனவே, இங்கு இராமன் என்பதை அடையாளம் காண்பதற்காகவும், தழுவிய நிலை என்பதற்காகவும் இராமன் அம்பரா, அம்பு இன்றி வில்லுடன் மட்டும் காட்டப்பட்டுள்ளான். இதில் இடம் பெறும் சீதையின் ஆடை அலங்காரமானது வட இந்தியப் பிராமணப் பெண்டிர் திருமணத்தின்போது கட்டிக் கொள்ளும் பாணியில் அமைந்திருப்பது இராமன் சீதையைத் திருமணம் முடித்து மகிழ்ச்சியோடு அழைத்துச் செல்வதாகக் கருதலாம். இராமனது சிற்பத்திற்கு முன் இருபுறமும் உள்ள தூண்களில் மன்மதனும், இரதியும் மலரம்பினைத் தொடுப்பதுபோல் அமைக்கப்பட்டுள்ளது மேற்கண்ட கருத்திற்கு அணிச் சேர்ப்பதாக அமைகிறது. ஸ்ரீவைகுண்டம் கோயிலில் இராமனது சிற்பம் சீதை மற்றும் அனுமனுடன் அமைக்கப்பெற்றுள்ளது. இதில் இராமனது இடது கையில் கோதண்டம் இடம் பெற்றுள்ளது. இராமன் தனது வலக்கையினால் அனுமனைத் தழுவியபடி காட்டப்பட்டுள்ளது. தன் தலைவனின் கை தன் மேல் பட்டதால் பரவசப்பட்டு வணங்கிய நிலையில் மெய்சிலிர்ப்புடன் அனுமன் காட்டப்பட்டுள்ளான். பொதுவாக அனுமன் இராமனது காலுக்கருகிலோ அல்லது இராமனைத் தோளில் சுமந்தபடியோ காட்டப்படுவது மரபு. இங்கு, இராமனுக்கருகில் நின்று இராமனே அனுமனின் தோளில் கைவைத்தபடி காட்டப்பட்டிருப்பது அரிதான காட்சியாகும். சேரன்மாதேவி இராமன் கோயிலில் இடம் பெறும் இராமஅனுமன் சிற்பத்தோடு மேற்கண்ட சிற்பம் ஒப்பு நோக்கத்தக்கதாகும். சேரன்மாதேவியில் இராமன் அனுமனைத் தழுவியிருக்கும் காட்சி முன்னதிலும் அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீவைகுண்டத்தில் இடம் பெறும் இராமனது உருவம் பெரியதாகவும், அனுமனது உருவம் இராமனைவிடச் சற்று சிறியதாகவும் சீதையின் உருவம் அனுமனை விடச் சற்று சிறியதாகவும் காட்டப்பட்டுள்ளது. ஒரு சிற்ப அமைதியில் முதன்மையான உருவத்தை மற்றவற்றைவிடச் சற்று உயரமாகக் காட்டுவது மரபாகும். இத்தகு அமைப்பிலிருந்து இங்கு யாருக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஊகிக்கலாம். இச்சிற்பவமைதியில் இராமன் வெற்றிப் பெருமிதத்தில் திளைப்பதுபோல் காட்டப்பட்டுள்ளான். எனவே, இச்சிற்பவமைதி இராவண வதத்திற்கு அடுத்த நிலையினை நினைவூட்டுவதாகத் தெரிகின்றது. மேலும், இராமன் அனுமனின் தோளில் கை வைத்துப் போரில் பெரும் பங்கு கொண்டதைப் பாராட்டுவதாகக் கொள்ளலாம். சீதையின் உருவம் பக்கவாட்டில் சிறிய அளவில் இடம் பெற்றிருக்கும். இக்காட்சி போருக்குப் பின் நடக்கும் நிகழ்ச்சி என்பதைக் குறிப்பாக உணர்த்துவதாகத் தோன்றுகிறது. சீதைக்கு அருகில் ஒருவர் கையில் கதையுடன் சீதைக்குச் சாமரம் வீசுவதுபோல் காட்டப்பட்டுள்ளார். இவரை விபீடணன் என அடையாளம் காணமுடிகிறது. மேலும், இச்சிற்ப தொகுதியின் கீழ் வானரங்கள் வணங்கிய நிலையில் காட்டப்பட்டுள்ளமை மேற்கண்ட கருத்திற்கு அணிசேர்ப்பதாய் அமைகிறது. நாங்குனேரியிலும் இராமன் அனுமனின் தோளில் கை வைத்தபடி ஸ்ரீ வைகுண்டம் இராமன் போலவே காட்டப்பட்டுள்ளான். இங்கு இராமனின் பக்கவாட்டில் இலக்குவன் நின்ற நிலையில் உள்ளான். இந்த இரு கோயில்களிலும் உள்ள சிற்பங்கள் ஒரே காலத்தில் அல்லது ஒரே கலை வல்லுனர்களால்

அமைக்கப்பட்டிருக்கக்கூடும். மன்னார் கோயிலிலும், ஆழ்வார்திருநகரியிலும் இராமன், இலக்குவன் மற்றும் சீதையோடு நின்ற கோலத்தில் இருப்பதைக் காணலாம். இச்சிற்பத்தில் இராமன் இடக்கையில் அம்பும், வலக்கையில் வில்லும் கொண்டு இயக்கநிலையின்றிக் காட்டப்பட்டுள்ளார். ஆழ்வார் திருநகரியில் சிற்பங்கள் சராசரி அளவைவிடக் குறைவான உயரத்துடன் அமைக்கப்பட்டிருப்பதால் கலைப்படைப்பில் இவற்றை அழகு குன்றிய சிற்பங்களாகக் கொள்ளலாம்.

**இலக்குவன்**

இலக்குவனது சிற்பம் தனித்தும், இராமனுடன் சேர்ந்தும் அமைந்துள்ளது. ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில், ஸ்ரீ வைகுண்டம், திருமோகூர், ஆழ்வார் திருநகரி, நாங்குனேரி, மன்னார்கோயில் ஆகிய கோயில்களில் இலக்குவனது சிற்பம் இடம் பெற்றுள்ளது. ஸ்ரீவில்லிபுத்தூரில் கொடி மண்டபத்தில் இலக்குவன் சூர்ப்பநகையை இடது காலால் மிதித்துக் கொண்டும் தன் இடது கையால் அவளது கூந்தலைப் பிடித்துக் கொண்டும் வலது கையில் உள்ள நீண்ட வாளால் சூர்ப்பநகையின் மூக்கை அறுப்பதுபோல் காட்டப்பட்டுள்ளது. கம்பராமாயணத்தில் இலக்குவன் சூர்ப்பநகையின் மூக்கை அறுப்பதாகவும் கூறப்பெற்றுள்ளது. எனவே, இதன் அடிப்படையில் இச்சிற்பம் சூர்ப்பநகையின் உறுப்பு குறைத்தல் காட்சி எனக் கொள்ளலாம். சங்கரன் கோயிலில் இருக்கும் சங்கர நாராயணன் கோயில் அர்த்த மண்டபத்திலும் சூர்ப்பநகை உறுப்புக்குறைத்தல் காட்சி சிறு அளவில் இடம் பெற்றுள்ளதைக் காணலாம். ஸ்ரீவைகுண்டம் திருவேங்கடநாதன் மண்டபத்தில் இடம்பெறும் இலக்குவனது சிற்பம் ஒரு கையில் வில்லுடனும், அம்புடனும் கூடிய மற்றொருகையை அங்கதனின் தோளில் வைத்து அரவணைத்தபடி நின்ற கோலத்தில் அமைந்துள்ளது. தலையில் கிரீடமின்றி காணப்படும் அங்கதன்சிற்பம் தனது ஒரு கையினால் வாய் பொத்தி மறுகையை முன்னர் வைத்து லேசாகக் குனிந்து நெகிழ்ச்சியுடன் காட்டப்பட்டுள்ளது. இலக்குவனது மறுபக்கம் சுக்ரீவன் அஞ்சலியில் நிற்கிறான். சுக்ரீவனின் தலையில் கிரீடம் இடம் பெற்றுள்ளது. சிற்பங்களை அடையாளம் காண்பதற்காகச் சிற்பி ஏதேனும் ஓர் உத்தியைக் கையாள்வதை இதன் மூலம் அறியமுடிகிறது. இச்சிற்பத்தில் பின்பக்கம் ஆஞ்சனேயன், இதனையடுத்த தூணில் இடம் பெற்றுள்ள இராமன் - சீதையை நோக்கி வணங்கிய நிலையிலும், அருகே விபீடணனும் இடம் பெறுகின்றனர். இலக்குவனது சிற்பத் தொகுதியின் கீழ் வானரங்கள் கையில் கத்தி மற்றும் கேடயத்துடன் சிறு அளவில் இடம் பெறுகின்றன. திருமோகூரில் உள்ள கருட மண்டபத்தில் இடம் பெறும் இராமன் - சீதை சிற்பத்திற்கு அடுத்த தூணில் இலக்குவனது சிற்பம் இடம் பெற்றுள்ளது. இதில் ஒரு கையில் வில்லும் மறுகையில் அம்பும் கொண்டு மிக அழகுடன் செதுக்கப்பட்டுள்ளது. ஆழ்வார் திருநகரியில் தனித்து இடம் பெற்றுள்ள இலக்குவனது சிற்பம் திருமோகூர் சிற்பம் போல் அல்லாது குட்டையாகவும் அழகு குன்றியும் அமைந்துள்ளது. நான்குனேரி மற்றும் மன்னார்கோயிலில் இலக்குவன் இராமனுடன் சேர்ந்து இடம் பெறுகிறான். இவற்றில் நாங்குனேரியில் ஒரு கையில் வில்லும், மறு கையில் அம்பும் கொண்டு காட்டப்பட்டுள்ளான். மன்னார் கோயிலில் வில்லைத் தனது தோளில் மாட்டி இருகைகளையும் கூப்பி வணங்கிய நிலையில் இடம் பெறுகிறான்.

**சீதை**

இராமாயணச் சிற்பங்கள் இடம் பெறும் கோயில்களில் எந்தக் கோயிலிலும் சீதை தனியாகக் காட்டப்படவில்லை. பெரும்பாலும் இராமனுடன் காட்டப்படுகிறாள். இது ஒரு மரபாகவே இருந்து வந்துள்ளது. திருமோகூர், ஸ்ரீ வைகுண்டம், ஆழ்வார்திருநகரி, மன்னார்கோயில் ஆகிய கோயில்களில் சீதை இராமனுடன் இடம் பெறுகிறாள். இவற்றில் திருமோகூரில் மட்டுமே இராமனால் தழுவப்பட்ட நிலையில் காணப்படுகிறாள். பிற இடங்களில் இராமனுக்கு அருகில் தனித்தே காட்டப்பட்டுள்ளாள். சீதையைக் காட்டும்போது ஏனைய இடங்களில் இராமனது இடுப்பளவிற்கே சிறியதாகக் காட்டப்பட்டுள்ளது. திருமோகூரில் திருமணக்கோலம் என்பதால் பொpய உருவமாகவும், மற்ற இடங்களில் இராமர் சிற்பம் தான் என்பதை உறுதிப்படுத்த இராமனுக்குப் பக்கத்தில் சீதையை வைத்திருக்கக் கூடும்.

**அனுமன்**

விஜயநகர - நாயக்கரது கலைகளில் அனுமனுக்கு முக்கியமான இடம் உண்டு. இராமனிடம் அனுமன் எப்படிப் பணிவுடன் நடந்து கொள்கிறாரோ அதே போல் நாங்கள் வேற்று நாட்டிலிருந்து வந்த அரசர்கள் எனினும் எங்களிடம் அனுமனைப்போல பணிவாக நடந்து கொள்பவர்களுக்கு நாங்களும் இராமனைப்போல் நடந்து கொள்வோம் எனும் கருத்தின் அடிப்படையில் விஜயநகர - நாயக்கர் தங்களது கலைப் படைப்புக்களில் அனுமனுக்கு அதிகமாக முக்கியத்துவம் அளித்ததாகத் தோன்றுகிறது. இதனால்தான் இவர்களது காலத்தில் அனுமனுக்கு அதிகமான கோயில்களும் எழுந்தன என்று வெங்கட்ராமன் கூறுகின்றார். விஜயநகர - நாயக்க மன்னர்கள் இறைவனிடம் நாங்கள் கொண்டுள்ள பக்தி அனுமான் இராமபிரானிடம் கொண்டிருந்த பக்திக்கு ஈடாகயிருக்க வேண்டும் என்று விரும்பி அனுமனைப் போற்றியிருக்கலாம் என்று கூறவும் வாய்ப்புள்ளது. ஸ்ரீவைகுண்டம், நாங்குனேரி, தாடிக்கொம்பு, அழகர்கோயில், ஆழ்வார் திருநகரி, மன்னார்கோயில் ஆகிய இடங்களில் அனுமனது சிற்பம் இடம் பெறுகின்றது. இவற்றில் அழகர் கோயில், மன்னார் கோயில், ஆழ்வார் திருநகரி ஆகிய இடங்களில் தனித்தும், பிற கோயில்களில் இராமனுடனும் காட்டப்பட்டுள்ளார். ஸ்ரீவைகுண்டம் மற்றும் நான்குனேரியில் இராமன் அனுமனது தோளில் கை வைத்தபடி காட்டப்பட்டுள்ளது. இராமாவதாரத்தில் இராமன் தன்னை நாடிவந்தவர்களுக்கெல்லாம் உதவுகிறான். விசுவாமித்திரருக்காக தாடகையை அழித்தான். பரதனுக்குப் பதவி தந்து தான் காட்டிற்குச் சென்றான். குகனுக்குத் தன் தம்பி எனும் நிலை தந்தான். வாலியைக் கொன்று சுக்ரீவனுக்கு கிட்கிந்தையை அளித்தான். இராவணனை அழித்து விபீடனுக்கு இலங்கையை அளித்தான். ஆனால், இறுதிவரை உடனிருந்து உதவிய உனக்கு என்ன கைமாறு செய்வது என்பதுபோல் இராமன் அனுமனை அரவணைக்கிறhன். தன் தலைவனது கை தன் மீது பட்டதைவிடவா தனக்கு மகிழ்ச்சி தரக்கூடிய விசயம் ஒன்று இருக்கப்போகிறது என்பதுபோல் மெய்சிலிர்த்து வணங்கிய நிலையில் அனுமன் காணப்படுகின்றான். அனுமன் பொதுவாக இராமனது கால்களுக்கருகே அமர்ந்து வணங்கும் நிலையில் காட்டப்படுவான். ஆனால் இங்கு அனுமனை இராமன் அரவணைக்கும் இத்தகு சிற்பம் அரிதான ஒன்றாகும். தாடிக்கொம்பில் அனுமன் இராமனைத் தூக்கிச் செல்வதுபோல் இடம்

பெற்றுள்ளான். இக்காட்சி இராம - இராவண யுத்தத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது. அனுமன் இராமனது இரு பாதங்களையும் தன் கையில் ஏந்தியபடி காணப்படுகிறான். இதைத்தவிர வைகுண்டநாதன் சிற்பம் அமைந்துள்ள தூணின் பக்கவாட்டில் அதனை அடுத்து அமைந்துள்ள தூணில் மேற்கண்ட சிற்பத்தை நோக்கி செதுக்கப்பட்டுள்ள ஒரு காட்சியில் அனுமன் ஓர் அசுரனின் கையை வளைத்துப் பிடித்தபடி காணப்படுகிறான்.

அவ்வசுரன் அனுமனைத் தன் இடது கரத்தால் சுற்றிப் பிடித்தபடி வலது கரத்தில் வேலினை எய்யும் நிலையில் காட்டப்பட்டுள்ளான். இக்காட்சி கம்பராமாயணத்தில் இடம் பெறுகிறது. சூலப்படைக்குத் தலைவன் நிகும்பன் ஆவான். நிகும்பனும், அங்கதனும் மோதுகின்றனர். இச்சண்டையில் நிகும்பன் அங்கதனை நோக்கிச் சூலத்தை வீச முற்படுகிறான். அவனது கையிலிருந்து சூலம் செல்லுமானால் அங்கதன் நிச்சயமாகப் பிழைப்பது அரிது எனக் கருதிய அனுமன் சூலத்தை நிகும்பன் எறிய இயலாது அவனது கையைப் பிடித்துத் தடுக்கிறான். இக்காட்சி மிக அரிதான ஒன்றாகும். அழகர்கோயிலில் அனுமன் வணங்கிய நிலையில் முழு உருவச் சிற்பமாக இடம் பெறுகிறான். அனுமன் பொதுவாக இராமனையும், சீதையையும் வணங்குவது வழக்கம். ஆனால், இங்கு அனுமனுக்கு நேர்எதிரே உள்ள தூணில் பூவராக மூர்த்தி இடம் பெற்றுள்ளார். பூமகளே சீதை என்பதால் இங்கு வராகரின் மடியில் இடம் பெற்றுள்ள பூமகளைச் சீதையாக எண்ணி வழிபடுகிறான் எனக் கருத இடமுள்ளது. ஆழ்வார் திருநகரியிலும் தனித்து அஞ்சலியில் இராமனுக்கு அடுத்த தூணில் காணப்படுகின்றார். மன்னார்கோயிலில் இராமனுடைய சிற்பத்தூணின் பக்கவாட்டில் இடம் பெறுகின்றார்.

**வாலி- சுக்ரீவன்**

வாலி - சுக்ரீவன் சிற்பங்கள் அதிக அளவில் தூண்களின் சதுரப்பகுதிகளில் சிறு வடிவில் இடம் பெறுவதைக் காணமுடிகிறது. மண்டபச் சிற்பங்களில் திருக்குறுங்குடியில் மட்டுமே வாலி - சுக்ரீவன் சிற்பம் இடம் பெற்றுள்ளது. வாலி - சுக்ரீவனை எதிர் எதிர்த்தூண்களில் காட்டுவது வழக்கம். இங்கு அடுத்தடுத்த தூண்களில் இடம் பெறுகின்றனர். எனினும், ஒருவரை ஒருவர் பார்த்தபடி ஒரு கையைத் தொடையிலும், மறுகையைத் தாடகஸ்தத்திலும் வைத்தபடி காட்டப்பட்டுள்ளனர். தலையில் கிரீடம், அணிகலன்கள் முதலியன கொண்டு பார்ப்பதற்கு இருவரும் ஒரே வடிவில் தோன்றினாலும் சுக்ரீவன் கழுத்தில் மாலை இடம் பெற்றுள்ளது. இராமன், வாலி - சுக்ரீவன் ஆகிய இருவரில் யார் சுக்ரீவன் என்பதைத் தொpந்து கொள்ள சுக்ரீவனுக்கு மாலையிட்டு அனுப்பியதை நோ;த்தியுடன் படைத்த சிற்பியின் படைப்பாற்றல் போற்றத்தக்கதாகும்.

**குகன்**

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் மட்டும் குகனது சிற்பம் இடம் பெறுகின்றது. ஒரு கையினால் மீசையைத் திருகியபடியும் தோளில் கொம்புடனும் காணப்படும் இச்சிற்பத்தின் எதிரே இடம் பெறும் சிற்பம் கர்ணனின் தேரோட்டியான சாத்தகியாதலால் இச்சிற்பத்தைக் குகன் எனக் கொள்ளலாம். படகோட்டியும், தேரோட்டியும் எதிரெதிரே அமைக்கப்பட்டுள்ளனர் எனக் கருதப்படுகிறது.

**பரதன்**

பரதனின் சிற்பம் ஆழ்வார் திருநகாpயில் மட்டும் இடம் பெற்றுள்ளது. ஒரு கையில் வில்லும், மறு கையில் அம்பும் கொண்டு நின்ற நிலையில் இயக்கமின்றி அமைக்கப்பட்டுள்ளது.

**சத்ருக்ணன்**

சத்ருக்ணன் சிற்பம் ஆழ்வார்திருநகாpயில் மட்டுமே இடம் பெற்றுள்ளது. சத்ருக்ணனும், பரதனைப்போலவே வில்லும், அம்பும் கொண்டு காணப்படுகின்றான். இச்சிற்பங்கள் அளவில் குட்டையானவைகளாகக் காட்சியளிக்கின்றன. பரதன், சத்ருக்ணன் சிற்பங்கள் அடுத்தடுத்து இடம் பெற்றுள்ளன. இவா;களுக்கு நேர் எதிரே இராம இலக்குவர் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இங்கு சகோதரர்களில் இணைபிரியாத இருவர் ஒருபக்கமும் மற்றிருவர் எதிர்ப்பக்கமும் காட்டப்பட்டுள்ளனர். இதுவரை கண்ட இராமாயணச் சிற்பங்களிலிருந்து மண்டபங்களில் இடம் பெறும் சிற்பங்களில் பொதுவாக நல்ல பாத்திரங்களே காட்டப்படுகின்றன என்பதை அறிய முடிகின்றது. இதில் இராமனுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. சில சிற்பங்கள் காட்சிகளை விளக்குவதாகவும், சில சாதாரணமாக நின்ற கோலத்திலும் அமைகின்றன. மிக நுணுக்கமாகக் கதையினுள் இடம் பெறும் நிகும்பன் வதை முதலானவையும் கையாளப்பட்டுள்ளன.

**முடிவுரை**

விஜயநகர - நாயக்க மன்னா; காலத்தில் இருபெரும் இதிகாசங்களுக்கும் புராணக் கதைகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து அவற்றை விளக்கும் சிற்பங்களும், சிற்பத் தொகுதிகளும், கோயில் மண்டபங்களிலும், விமானத்தின் தளங்களிலும், கோபுரங்களின் தளங்களிலும் செதுக்கப்பட்டுள்ளமை புலனாகிறது. அம்மன்னர்கள் வைணவர்களாகியிருந்தபோதும் சைவ சமயத்தின் காழ்ப்புணர்வு கொண்டவரல்லர் என்பதை அறிவிக்கும் வகையில் சைவ சமயத்தொடர்புடைய சிற்பங்களும் இக்கோயில்களில் இடம்பெற்றுள்ளன. இக்கோயில்களில் உள்ள சிற்ப அமைப்புகள் கிராமங்களில் அல்லது நகரங்களில் அக்காலத்தில் நடத்தப்படும் நாடகப்பாங்கினைப் போன்று கதைத் தொடர்ச்சியினைக் கொண்டு, கற்களாயிருப்பினும் தொடர் கதையாக இயக்க நிலையில் உயிரோட்டமுள்ளனவாகவும் காட்டப்படுவது இங்

கு நோக்கத்தக்கதாகும். சில கோயில்களில் மட்டுமே இவ்வியக்க நிலையும், கதைத் தொடர்பும் அறுபடுவதைக் காண்கிறோம்.

**துணை நூற் பட்டியல்**

1. இராசமாணிக்கம். *தி.,தென்னகக் குடைவரைக் கோயில்கள்*,
சென்னை, 1990.
2. இந்திரா பார்த்தசாரதி, *தமிழ் இலக்கியங்களில் வைணவம், சென்னை*, 1992.
3. ஏகாம்பரநாதன். *ஏ.,தமிழகச் சிற்ப, ஓவியக் கலைகள், சென்னை*, 1984.
4. கணபதி ஸ்தபதி. *வை.,சிற்ப செந்நூல்*, சென்னை, 1978.
5. கந்தசாமி. ப., *தமிழ்நாட்டின் தலவரலாறுகளும், பண்பாட்டுச் சின்னங்களும்*,

சென்னை, 1983.

6. கருணானந்தன். இரா.ப.,*இராமாயண ஓவியக் குறிப்புகள்*, சென்னை, 1990.

7. நாகசாமி.இரா. *தமிழக கோயிற்கலைகள்*, சென்னை, 1963.

8. சீனி வேங்கிடசாமி, மயிலை, *தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்*, சென்னை, 1969.

9. நீலகண்ட சாஸ்திரி. கே.ஏ.,*தென்னிந்திய வரலாறு*, பாகம் 2, சென்னை, 1979.

*10.* தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான், *தமிழ்க் கோயில்களும், தமிழர் பண்பாடுகளும்*, திருநெல்வேலி, 1961,

*11.* ஆ.வேலுப்பிள்ளை, *தமிழர் சமய வரலாறு*, சென்னை, 1980.

*12.* ஸ்ரீநிவாசன். பி.ஆர்.,*நாம் வணங்கும் தெய்வங்கள்*, சென்னை, 1959.

*13.* நாகப்ப நாச்சியப்பன், *வேற்கோட்டம்*, சென்னை, 1981.